| 4. திரு. எஸ். பீ. தர்மதாஸ | படல்தென்ன இடம |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| | |
|---|---|
| 1. திரு. ஐ. பீ. சுனில் | படல்தென்ன இடம |
| 2. திரு. பீ. ஆர். என். பி. கே. ஜயகொடி | தெல்தெனிய கும்புர |
| 3. திரு. பி. எஸ். ஜகத் ரொஷான் குரே | படல்தென்ன இடம |
| 4. திரு. நிமல் குணரத்ன | படல்தென்ன இடம |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | வத்தேகெதர ஹப்புகஹதென்ன வத்த ஹின்னேகும்புர ஹேன பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | வத்தேகெதர ஹப்புகஹதென்ன வத்தையில் இருந்து ஹின்னேகும்புர ஹேன வரையான பாதை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 16 ஜீ வத்தேகெதர |
| பாதையின் நீளம் | : | 725 மீற்றர், அகலம் : 10 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. கே. ஆர். ரன்பண்டா | ஹப்புகஹதென்ன வத்த இடம |
| 2. திருமதி கே. ஆர். சுமனாவதி | ஹப்புகஹதென்ன வத்த இடம |
| 3. திருமதி கே. ஆர். லொகுமெனிகே | ஹப்புகஹதென்ன வத்த இடம |
| 4. திரு. கே. ஆர். புஞ்சி அப்புஹாமி | ஹப்புகஹதென்ன வத்த இடம |
| 5. திரு. கே. ஆர். நிஹால் அனுர குமார | ஹீன்னேகும்புர ஹேன இடம |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. கே. ஆர். புஞ்சி பண்டா | ஹப்புகஹமுல ஹேன இடம |
| 2. திரு. எஸ். ஏ. சரத் தஸனாயக | ஹீன்னேகும்புர ஹேன இடம |
| 3. திரு. கே. ஆர். சரத் திஸானாயக | ஹீன்னேகும்புர ஹேன இடம |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | ஹபலக்காவ ஸ்ரீ ஜயசுமனாராம மாவத்தையிலிருந்து உடஹேன வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | ஹபலக்காவ ஸ்ரீ ஜயசுமனாராம மாவத்தையிலிருந்து உடஹேன வரையான பாதை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 44ஏ ஹபலக்காவ |
| பாதையின் நீளம் | : | 500 மீற்றர் அகலம் : 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி ஏ. டபிள்யூ. ஜீ. எம். டி. சொபயா | ஹேன இடம |
| 2. திரு. டபிள்யூ. ஜீ. எஸ். சுனந்த | ஹேன இடம |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி ஏ. டபிள்யூ. ஜீ. எம். டி. சொபயா | ஹேன இடம |
| 2. திருமதி யு. டி. எஸ். சந்ரகாந்தி | கொபிலந்த இடம |
| 3. திருமதி எஸ். டி. சீலவதி | கொபிலந்த இடம |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | வேவல விகாரையிலிருந்து உடகஹவத்த வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | வேவல விகாரை அருகில் ஆரம்பித்து உடகஹவத்த காணியில் முடிவுறும் |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 42பி பன்னல |
| பாதையின் நீளம் | : | 800 மீற்றர் அகலம் : 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | வண. தம்மதஜ தேரோ | விஹார பூமி இடம |
| 2. | திரு. டி. ஜீ. நந்தன ஜயதிஸ்ஸ | வேவல ஹேன இடம |
| 3. | திரு. எஸ். டி. ரணவீர | லெசனே கொட்டுவ இடம |
| 4. | திரு. ஏ. டபிள்யூ. ஜயநந்த | உடகஹவத்த இடம |
| 5. | திருமதி டபிள்யூ. புஷ்பலதா | உடகஹவத்த இடம |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | திரு. ஜீ. டி. ஜயந்த நிஷ்ஷங்க | வேவல ஹேன இடம |
| 2. | திரு. பீ. எல். ஜயவர்தன | ஹாலிஎல இடம |
| 3. | திரு. டி. ஜீ. நந்தன ஜயதிஸ்ஸ | ஹாலிஎல இடம |
| 4. | திரு. கே. ஆர். சேனாதீர | அம்பலன்பிட்டிய லியத்த |
| 5. | திரு. ஏ. டபிள்யூ. பேபி | ஹாலிஎல இடம |
| 6. | திரு. பீ. எல். கருணாதிலக | ஹாலிஎல இடம |
| 7. | திருமதி எல். கருணா லதா | ஹாலிஎல இடம |
| 8. | திரு. பீ. எல் கருணாதிலக | ஹாலிஎல இடம |
| 9. | திரு. பீ. எல். ஆரியசிங்ஹ | ஹாலிஎல இடம |
| 10. | வண. சொரத தேரர் | கிரிவனா இடம |
| 11. | திரு. ஏ. டபிள்யூ. பியதாஸ | நிகமுல்லே இடம |
| 12. | திரு. ஏ. டபிள்யூ. உபாலி சமரவிக்ரம | உடகஹவத்த இடம |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | வெலிமன்ன பிங்கனடிய வயலூடாக உடஹவத்த பாதை |
| பாதையின் தொடக்கம் மற்றும் முடிவு | : | வெலிமன்ன பிக்கனடிய வயலில் ஆரம்பித்து முனமல்கஹவத்த காணியில் முடிவடையும் பாதை |
| கிராம சேவகர் பிரிவு, இலக்கம் | : | கெடபேரி கந்த - 43 |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | 213 மீற்றர், 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை இடது பக்கமாகவுள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | வண. பஞ்ஞாலோக | பிங்கனடிய கும்புர |
| 2. | திரு. கே. ஜி. அபேரத்ன | எஸ்ஸெத்தும கும்புர |
| 3. | திரு. எம். ஜி. ஏ. ஆர். ஹீன்வெல்ல | எஸ்ஸெத்தும கும்புர |
| 4. | திரு. ஜி. ஏ. வி. குணவர்தன | எகொடவத்த |
| 5. | திரு. எம். வி. ஜயவர்தன | எகொடவத்த |
| 6. | திரு. யு. ஜி. விக்ரமசிங்க | குரஹங்கொட்டுவ |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலது பக்கமாகவுள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | வண. பஞ்ஞாலோக | நெவெந்தெனிய கும்புர |
| 2. | திரு. என். சமரபால | எகொடஹவத்த |
| 3. | திரு. ஜி. ஏ. வி. குணவர்தன | எகொடவத்த |
| 4. | திரு. எம். வி. ஜயவர்தன | எகொடவத்த |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | தெலஹிட்டியாவ மயான அருகில் திரு. ஸஹீர் அவர்களின் வீட்டுக்கு அருகாமை வரை அமையும் தெலஹிட்டியாவ துணைப்பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | தெலஹிட்டியாவ மயான அருகில் திரு. ஸஹீர் அவர்களின் வீடு வரை அமையும் பாதை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 45/பி கெவிலிபிட்டிய நகரம் |
| பாதையின் நீளம் | : | 25 மீற்றர், அகலம் : 8 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

1. கும்புரே பில்லேவ

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப் பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திருமதி பி. டி. சீ. ஜரங்கனி பிரநாந்து | R7246 காணி |
| 2. திரு. ஏ. டபிள்யூ. திலகரத்ன | R7245 காணி |
| 3. திருமதி டபிள்யூ. ஏ. அநுலாவதி | R7244 காணி |
| 4. திரு. ரீ. டி. உதேசிரி | R7243 காணி |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | கம்மன்னாகொடையிலிருந்து அமுஹேன வரையான பாதை |
| பாதையின் ஆரம்பமும் முடிவும் | : | மாவனல்லை எரவ்பொல பாதையில் இருந்து ஹிருவல் அம்பேஹேன வரையான பாதை |
| கிராம அதிகாரிப் பிரிவு | : | 17 சீ கம்மன்னாகொடை |
| பாதையின் நீளம் | : | 243 மீற்றர், அகலம் : 6 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் இடப்பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. ஜீ. பீ. ஜீ. ஆர். டி ஜயரத்ன | சியம்பலாஉல்ல கும்புர |
| 2. திரு. ஜீ. பீ. ஜீ. ஆர். டி ஜயரத்ன | ஹிடினாவத்த இடம |
| 3. திரு. பீ. வீ. வசந்த அமரசிங்ஹ | பஹலவத்த இடம |
| 4. திரு. பீ. வீ. ஜயசேன | தென்னேவத்த இடம |
| 5. திரு. பீ. வீ. பியதாஸ | ஹிருவல் அம்பேஹேன இடம |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை பாதையின் வலப் பக்கமாகவுள்ள காணி, காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. பீ. வீ. எட்வின் | சியம்பலாஉல்ல கும்புர |
| 2. திரு. பீ. வீ. விஜேசுந்தர | பஹலவத்த இடம |
| 3. திரு. பீ. வீ. ஜயசேன | தென்னேவத்த இடம |
| 4. திரு. பீ. வீ. பியதாஸ | ஹிருவல் அம்பேஹேன இடம |

| | | |
|---|---|---|
| பாதையின் பெயர் | : | 3 ஆம் மைல் கல்லிலிருந்து தொலமக வரையுள்ள பாதையில் திரு. குணவர்தன அவர்களின் வீட்டருகாமையிலிருந்து அஹஸ்லியத்த வரையான பாதை |
| பாதையின் தொடக்கம் மற்றும் முடிவு | : | ஹாஸ்லியத்த கிராமத்தில் அமைந்துள்ள ஹேதெனியவத்த காணியில் ஆரம்பித்து அஹஸ்லியத்தவத்த வரையான பாதை |
| கிராம சேவகர் பிரிவு | : | வாகிரிகலை |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : | 516 மீற்றர், 12 அடி |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை இடது பக்கமாகவுள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | |
|---|---|
| 1. திரு. எம். டி. ஜி. தஸநாயக | ஹேதெனியவத்த |
| 2. திரு. எம். ஏ. ப்ரசாத் விக்ரமசிங்க | ஹேதெனியவத்த |
| 3. திரு. ஏ. சேனத் | கலவ்கஸ்ஹின்னே ஹேன |
| 4. திருமதி ஆர். ஜானகி மங்கிகா | பன்சலேஹேன |
| 5. வண. தீவெல சந்திரசிரி | பன்சலேஹேன |
| 6. திரு. சோமதிலக | வெலிகடஹேன |
| 7. திரு. எம். ஜயசேன | அஹஸ்லியத்த வத்த |

பாதையின் ஆரம்பம் முதல் இறுதி வரை வலது பக்கமாகவுள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள் :

| | | |
|---|---|---|
| 1. | திரு. எம். டி. ஜீ. தஸநாயக்க | ஹேதெனியவத்த |
| 2. | திரு. எம். சிரில் குணவர்தன | பெல்லெனவத்த |
| 3. | திரு. எம். டி. ஜீ. தஸநாயக்க | ஹேதெனியவத்த |
| 4. | திருமதி கே. சிந்தா சமரசிங்க | பன்சலேஹேன |
| 5. | திரு. எம். எம். ஆரியதாஸ | கலவிகஸ்ஹின்னேஹேன |
| 6. | திருமதி கே. சிந்தா சமரசிங்க | ஹேதெனியவத்த |
| 7. | திருமதி கே. ஸ்ரீயானி, திரு. ஆர். சைமன் | பன்சலேஹேன |
| 8. | வண. தீவெல சந்திரசிரி | பன்சலேஹேன |
| 9. | திரு. ஜே. சோமதிலக | வெலிகடஹேன |
| 10. | திரு. ஜி. ஜி. விமலசூரிய | அஹஸ்லியத்தவத்த |

6-242

# துணை விதிகள்

## குருவிட்ட பிரதேச சபை

அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்

261 ஆம் அத்தியாயத்தின் 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் குருவிட்ட பிரதேச சபையினால் 2013 ஆம் ஆண்டின் பெப்புருவரி மாதம் 19 ஆந் திகதி நடத்தப்பட்ட சபைக் கூட்டத்தில், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள 06-01-01 ஆம் இலக்கப் பிரேரணை அங்கீகரிக்கப்பட்டது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

பிரேமரத்ன மல்கெக்குல,
தவிசாளர்,
குருவிட்ட பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
குருவிட்ட,
2013.05.27.

**அட்டவணை**

"1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாம் பிரிவின் (1) ஆம் கொண்ட உட் பிரிவின் (அ) பந்தியுடன் வாசிக்க வேண்டிய 261 ஆம் அத்தியாயமான 1952 ஆம் ஆண்டின் உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் சப்பிரகமுவ மாகாண சபையின் உள்ளூராட்சி விடயம் பொறுப்பான அமைச்சரிடம் அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் ஒழுங்கு செய்யப்பட்டு 2011.01.28 ஆந் திகதியும் 1691 ஆம் இலக்கமும் உடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிக்கப்பட்ட, சப்பிரகமுவ மாகாண சபையினால் உறுதிப்படுத்தப்பட்டது என்பதை 2012.03.30 ஆந் திகதி வெளிவந்த 1752 ஆம் இலக்கமுடைய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV (அ) பகுதியில் பிரசுரிகைப்பட்ட சப்பிரகமுவ மாகாணத்தின் பிரதேச சபைகளின் நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளை அழித்தல் தொடர்பான வரைவுத் துணைவிதிகள், இப்பிரேரணை வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் திகதி தொடக்கம் செயற்படுத்துவதற்கும், ஏற்றுக்கொள்வதற்கும் மேற்கூறிய உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணைவிதிகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் குருவிட்ட பிரதேச சபையினால் பிரேரிக்கப்படுகின்றது."

### குருவிட்ட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகளை அழித்தல் தொடர்பான துணைவிதிகள்

1. இத்துணை விதிகள் குருவிட்ட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகள் பரவுதலைத் தவிர்த்தல் மற்றும் அவைகளை அழித்தொழித்தல் மூலம் அதிகாரப் பிரதேசத்தின் சுற்றாடலின் தரத்தை மேம்படுத்தல் மற்றும் நோய்களை பரவுதலைத் தவிர்த்தல் ஆகிய நடவடிக்கைகளுக்கான துணைவிதிகளென அறிமுகப்படுத்தப்படுகின்றது.

2. குருவிட்ட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள், எந்தவொருவராலும் ஏதாவதொரு சுற்றாடலில் நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகள் உண்டாகும் வகையிலும் அவைகள் விருத்தியடையும் வகையிலும் செயற்படுதல் அல்லது செய்விக்கப்படுதல் அல்லது அவ்வாறு செய்வதற்கு இடமளிக்கப்படுதல் ஆகிய செயல்கள் செய்யப்படாதிருத்தல் வேண்டும்.

3. நுளம்புகள் மற்றும் நோய்க் கிருமிகளை அழித்தொழிப்பதற்காக குருவிட்ட பிரதேச சபையின் அதிகாரப் பிரதேசத்தின் எல்லா இடங்களிலும் வசிக்கும் அனைவராலும்.

(i) மூடப்படாத அனைத்து டின்கள், போத்தல்கள், பிளாஸ்டிக் கேன்கள், டயர்கள், சிரட்டைகள் தேங்காய் கோம்பைகள் அத்துடன் அவ்விடங்களிலுள்ள நீர்த் தேங்கி நிற்கக்கூடிய ஏனைய அனைத்துப் பொருட்கள் மற்றும் பாத்திரங்களை நீக்குவதற்கு அல்லது அவற்றை அழித்தொழிப்பதற்கு அல்லது அவ்வாறு செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(ii) மக்கள் வசிக்கின்ற அல்லது மக்கள் வசிக்காத கட்டிடங்களின் கூரைப் பீலிகள், நீர் கீழே இறங்கும் குழாய்கள் மற்றும் வீட்டுத் தோட்டங்களிலுள்ள வடிகால்களில் நீர் இறங்கிச் செல்லுதலை முறைப்படுத்திப் பேணப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றில் தடைகள் இருக்கின்றனவா என எப்பொழுதும் அவதானத்துடன் இருந்து அத்தகைய தடைகள் நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

(iii) மக்கள் வசிக்கின்ற அல்லது மக்கள் வசிக்காத சுற்றாடல்களிலுள்ள அனைத்து நீர்ப்பாத்திரங்கள், தாங்கிகள் மற்றும் நீரைச் சேகரிக்கும் எனைய பாத்திரங்கள் சிறந்த நிலையிலும், காலத்துக்கேற்ற சீர்த்திருத்தங்களுடன் பேணிச் செல்வதற்கும் அவற்றை நுளம்புகள் மற்றும் கிருமிகளிலிருந்து பாதுகாப்பாகும் வகையில் மூடி வைப்பதற்கும், அவற்றில் நுளம்புகள் மற்றும் நோய்கிருமிகள் உண்டாகாதிருக்கும் வகையில் வைத்துக்கொள்வதற்கும், நுளம்புகள் மற்றும் நோய்கிருமிகள் உண்டாவதைத் தவிர்ப்பதற்காகத் தேவைப்படக்கூடிய ஏற்ற நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(iv) சுற்றாடலிலுள்ள அனைத்துக் கிணறுகளும் சிறந்த நிலையில் பேணிச் செல்லப்படுதல் வேண்டும். அத்துடன் அவற்றில் நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகள் உண்டாகாதிருக்கும் வகையில் வைத்துக் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

(v) இறைக்கக்கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ள ஏதாவதொரு செயற்கைத் தடாகம் இருக்குமாயின் அது ஆகக்குறைந்தது வாரத்திற்கு ஒரு முறையாவது இறைத்துச் சுத்தப்படுத்தப்படுதல் வேண்டும்.

(vi) வீட்டுத் தோட்டங்கள் மற்றும் காணிகளிலுள்ள வடிகால்களினூடாக இறங்கிச் செல்லும் நீர் ஒன்றுசேர்ந்து தேங்கி நிற்கும் குழிகள் உண்டாவதைத் தவிர்ப்பதற்காக அவை நாள்தோறும் பேணப்படுதல் வேண்டும்.

(vii) உணவுநோக்கமாக அல்லது அழகுக்காக நாட்டப்படும் தாவரங்களைத் தவிர ஏனைய அனைத்துச் சிறு காடுகள், பயிர்கள் மற்றும் மரஞ்செடி கொடிகள் என்பன மனித வாழ்விடமாக உபயோகிக்கும் ஏதாவதொரு கட்டிடத்திலிருந்து அல்லது நிர்மாணிப்பிலிருந்து 5 மீற்றர்களுக்கு உட்பட்டிருக்கும் அனைத்துப் பிரதேசங்களில் இருந்தும் நீக்கம் செய்யப்படுதல் வேண்டும்.

(viii) அனைத்து கல் குழிகள், மாணிக்கக்கல் அகழ்ந்த குழிகள், களிமண் குழிகள் அல்லது ஏனைய ஏதாவதொரு கருமத்துக்காக தோண்டப்பட்ட குழிகள் என்பனவற்றில் நீர் ஒன்றுசேராதவாறு பேணப்படுதல் வேண்டும்.

(ix) நீரத் தேங்கி நிற்கக்கூடிய வீட்டுத் தரைகளில் வளரும் அழகிய தாவரங்கள், நீர்த் தாவரங்கள், நுரைபாசி, எண்ணெய்பாசி, யானைக்கால் பாசி உட்பட்ட அனைத்து நீர்த் தாவரங்களும் நுளம்புகள் மற்றும் கிருமிகள் உண்டாவதற்கு வழிவகுக்குமென ஏற்கனவே அறிந்துகொள்ளக்கூடிய ஏனைய ஏதாவதொரு செடியை அல்லது செடிகளை நீக்கம் செய்து அழித்து ஒழித்துவிடப்படுதல் வேண்டும். அத்துடன் மேற்கூறிய செடிகள் அல்லது தாவரங்கள் ஏதாவதொரு நீரோட்டம் ஒன்றினூடாக மிதந்து செல்வதைத் தவிர்க்கும்படி தகுந்த தடைகளை ஏற்படுத்தி அவை பரவுதலைத் தவிர்க்கப்படுதல் வேண்டும்.

(x) மலசலகூடங்கள், நீர்க்குழிகள், நீர் உறிஞ்சிக் கொள்ளும் குழிகள், முத்திரையிடப்பட்ட குழிகள் மற்றும் அவற்றின் சுற்றாடல் உட்பட அவ்விடத்திலுள்ள அனைத்து மலசலகூடங்களும் நுளம்புகள் உண்டாவதைத் தவிர்க்கும் வகையில் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

(xi) மயானங்களில் அல்லது ஏனைய இடங்களில் இறந்தவர்களுக்காக அமைக்கப்படும் நினைவுச் சின்னங்கள் என்பன நீர்த்தேங்கி நிற்காதவாறு அமைக்கப்படல் வேண்டும்.

4. குருவிட்ட பிரதேச சபையின் தவிசாளரால் அல்லது அவரால் முறைப்படி எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமொரு உத்தியோகத்தரால், எந்தவொரு நாளிலும் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணி வரையிலான காலஎல்லைக்குள் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் ஏதாவதொரு சுற்றாடலுக்குப் பிரவேசித்து பின்வரும் தகவல்களை உறுதி செய்து கொள்வதற்காக சோதனையிடப்படுவது சட்டரீதியானதாகும்.

(i) சுற்றாடலானது நுளம்புகள் மற்றும் கிருமிகள் உண்டாகும் சுற்றாடலா என்பது பற்றி ;

(ii) அச்சுற்றாடலில் வசிப்பவர்கள் இத்துணைவிதிகளின் ஏற்பாடுகளைப் பின்பற்றி இருக்கின்றார்களா என்பது பற்றி ;

(iii) அச்சுற்றாடலில் நுளம்புகள் உண்டாவதைத் தடுப்பதற்காகவும், அழித்து ஒழிப்பதற்காகவும் எவையேனும் நடவடிக்கைகள் மேற்கொள்ளத் தேவைப்படுமாயின் அத்தகைய நடவடிக்கைகள் எவ்வாறானவை என்பது பற்றியும் அத்துடன் ;

(iv) அச்சுற்றாடலில் கிருமி நாசினி வெற்றிகரமான முறையில் தெளிக்கப்பட்டிருக்கின்றதா என்பது பற்றியும்.

5. (i) தவிசாளரால் அல்லது அவரால் தற்கருமத்துக்காக எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமொரு உத்தியோகத்தரால், ஏதாவதொரு சுற்றாடலில் செய்யப்பட வேண்டுமெனக் கருதப்படும் சோதனையொன்றின் பின்பு மேற்கூறிய சுற்றாடலில் நுளம்புகள் மற்றும் நோய்க்கிருமிகளை அழித்தொழிப்பதற்கும் அவைகள் உண்டாகி விருத்தியடைவதைத் தடுப்பதற்காகவும் மேற்கொள்ள வேண்டிய பணிகளை எழுத்துமூலமாக அறிவித்தலொன்றின் மூலம் அச்சுற்றாடலின் உரிமையாளருக்கு அல்லது அதில் வசிப்பவர்களுக்கு பணிப்பிடப்படலாம்.

(ii) இத்துணைவிதியின் (1) ஆம் பந்தியின் கீழ் அறிவித்தலொன்று கையளிக்கப்பட்ட ஏதாவதொரு சுற்றாடலின் உரிமையாளர் அல்லது வசிப்பாளர் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள கால எல்லைக்குள் மேற்கூறிய பணிப்புகளின்படி செயல்புரிதல் வேண்டும்.

6. (i) தவிசாளரின் எழுத்துமூலமான அனுமதியின்றி ஏதாவதொரு சுற்றாடலின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் அச்சுற்றாடலில் ஏதாவதொரு கிணறு அல்லது நீர்த்தாங்கி அல்லது நீர்த்தடாகம், நீர்ப்பாத்திரமொன்று, நீர்ப்பூவொன்று அல்லது நீர் ஒன்றுசேரக்கூடிய அல்லது நீரைத் தேக்கி வைக்கும் ஏனையவொரு அமைப்பும் நிர்மாணிக்கப்படாதிருத்தல் வேண்டும்.

(ii) இத்துணை விதியின் (i) ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு முரணாக ஏதாவதொரு நிர்மாணம் அமைக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் தவிசாளரால் அவ்விடத்தின் உரிமையாளரிடம் அல்லது வசிப்பாளரிடம் கையளிக்கப்படும் எழுத்து மூலமான அறிவித்தலொன்றின் மூலம், அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள கால எல்லைக்குள் மேற்கூறிய கிணற்றை, தாங்கியை, தடாகத்தை நீர்ப்பாத்திரத்தை நீர்ப்பூவை அல்லது அமைப்பை, குறித்துரைக்கப்படும் ஏதாவதொரு பொருளினால் மூடிவிடுமாறு அல்லது ஏனையவொரு முறையில் அழித்துவிடுமாறு அல்லது ஏனையவொரு முறையில் அக்கால எல்லைக்குள் அவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதை மற்றும் செய்யுமாறு பணிப்பிடப்படலாம்.

7. (i) 05 ஆம் அல்லது 06 ஆம் துணைவிதியின் கீழான அறிவித்தலொன்று ஏதாவதொரு சுற்றாடலின் உரிமையாளருக்கு அல்லது வசிப்பாளருக்கு பிரத்தியேகமான முறையில் கையளிக்கப்படலாம் அல்லது அவ்வறிவித்தல் மேற்கூறிய இடத்தில் தெளிவாகக் காணக்கூடிய வகையில் ஒட்டுவதன் மூலம் அறிவிக்கப்படலாம்.

(ii) ஏதாவதொரு சுற்றாடலின் பங்கு உரிமையாளர்கள் இருவரால் அல்லது அதனிலும் கூடிய எண்ணிக்கையானோர்களில் சுற்றாடலொன்று ஒன்று சேர்ந்து உபயோகிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில் அந்த உரிமையாளர்களுள் ஒவ்வொரு உரிமையாளரிடமும் 7 (1) ஆம் துணைவிதியின் கீழும் 5 ஆம் துணை விதியின் கீழும் அவர்களுள் எவரேனுமொருவரிடம் கையளிக்கப்படும் ஏதாவதொரு அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பணிப்புகள் நிறைவேற்றுதல் தொடர்பில் ஏதாவதொரு புறக்கணிப்பிற்கு அல்லது நிறைவேற்றாமைக்கு அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுவாகவும் வெவ்வேறாகவும் பொறுப்பு கூறப்படல் வேண்டும்.

(iii) 5 ஆம் அல்லது 6 ஆம் துணைவிதியின் கீழ் அறிவித்தலொன்று கையளிக்கப்பட்ட ஏதாவதொரு சுற்றாடலின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் மேற்கூறிய அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ள பணிப்புகள் நிறைவேற்றப்படுதலைப் புறக்கணிக்கப்படும் சந்தர்ப்பமொன்றில், தவிசாளரால் அல்லது அந்த அறிவித்தலை வழங்கிய உத்தியோகத்தரால் அல்லது இக்கருமத்துக்காக தவிசாளரால் அதிகாரமளிக்கப்பட்ட ஏனைய எவரேனுமொரு உத்தியோகத்தரால் ஏதாவதொரு தினத்தில் மு. ப. 6.00 மணி தொடக்கம் பி. ப. 6.00 மணி வரையிலான கால எல்லைக்குள் ஏதாவதொரு வேளையில் தேவையான உதவியாளர்கள் மற்றும் ஊழியர்களுடன் மேற்கூறிய சுற்றாடலில் உட்பிரவேசித்து அவ்வறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டள்ள பணிகள் செயற்படுத்தப்படலாம், செய்விக்கப்படலாம் அல்லது செய்விப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படலாம்.

(iv) ஏதாவதொரு சுற்றாடலின் உரிமையாளரிடம் அல்லது வசிப்பாளரிடம் 5 ஆம் அல்லது 6 ஆம் துணை விதிகளின் கீழ் கையளிக்கப்பட்ட அறிவித்தலொன்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவதொரு பணி அல்லது பணிகள் தவிசாளரால் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரால் செயற்படுத்தப்பட்டபோது அல்லது நிறைவேற்றப்பட்டபோது அந்த பணி அல்லது பணிகள் செயற்படுத்தப்படுதல் தொடர்பில் பிரதேச சபைக்கு ஏற்பட்ட செலவினத்தை மேற்கூறிய இடத்தின் உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் பிரதேச சபைக்குச் செலுத்தப்படுதல் வேண்டும். தவிசாளரால் தனது கையொப்பத்தின்கீழ் அது தொடர்பில் எழுத்துமூலமாக வழங்கப்படும் வேண்டுகோள் ஒன்றின்பின் 14 நாட்களுக்குள் மேற்கூறிய செலவிடப்பட்ட பணத்தொகை உரிமையாளரால் அல்லது வசிப்பாளரால் பிரதேச சபைக்குச் செலுத்தப்படல் வேண்டும். அத்துடன் குறிப்பிட்ட கால எல்லைக்குள் மேற்கூறிய பணத்தொகை செலுத்தப்படாவிட்டால் பிரதேச சபைகள் சட்டத்தின் VIII ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடையதாதல் வேண்டும்.

*8. இத்துணை விதியிலுள்ள ஏதாவதொரு ஏற்பாட்டை மீறும் எவராயினும் ஒருவர் பிரதேச சபைகள் சட்டத்தின் பிரகாரம் குற்றமொன்றுக்குக் குற்றவாளியாவார்.*

*9. சொற்கள் தொடர்பில் வேறு பொருள் தேவைப்பட்டாலன்றி இத்துணை விதிகளில்,*

*'உரிமையாளர்' என்னும் சொல் எவரேனுமொரு உரிமையாளரையும் வாடகையாளர் ஒருவரையும் அத்துடன் ஏதாவதொரு சுற்றாடலின் வாடகைக்கு, விளைச்சலுக்கு ஏதாவதொரு வகையில் உரிமையுடைய ஒரு நபரைக் குறிக்கும்.*

*'வசிப்பாளர்' என்னும் சொல் ஏதாவதொரு சுற்றாடலில் வசிக்கின்ற அல்லது இன்னுமொருவரின் பிரதிநிதி ஒருவராக அல்லது அதன் பொறுப்பை முகாமைத்துவம் செய்கின்ற அல்லது நிருவகிக்கின்ற நபரொருவரைப் பொருட்படுத்தும்.*

*'சுற்றாடல்' என்னும் சொல் ஏதாவதொரு காணியை, வீட்டை, கட்டிடத்தை, நிர்மாணத்தை, அல்லது உபயோகிக்கின்ற அல்லது கைவிடப்பட்டுள்ளவொரு கிணறு, கப்பல் அல்லது கொள்கலம் அல்லது கைவிடப்பட்டுள்ளவொரு வாகனத்தைப் பொருட்படுத்துவதுடன் ஏதாவதொரு தடாகம், தாங்கியொன்று, குளம், நீரோட்டம், வடிகால் மற்றும் ஆற்றுப்பள்ளத்தாக்குகள் என்பனவற்றையும் பொருட்படுத்தும்.*

*'அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்' என்னும் சொற்கள் குருவிட்ட பிரதேச சபையின் தவிசாளரால் எழுத்து மூலமாக அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமொரு உத்தியோகத்தரை அல்லது ஊழியரைப் பொருட்படுத்தும்.*

*'நோய்க்கிருமிகள்' என்பது நுளம்புகள் மற்றும் நோய்களை உண்டாக்கும் ஏனைய கிருமிகளையும் பொருட்படுத்தும்.*

*'தவிசாளர்' என்னும் சொல் குருவிட்ட பிரதேச சபையின் தவிசாளரையும் அத்துடன்,*

*'சபை' என்னும் சொல் குருவிட்ட பிரதேச சபையையும் பொருட்படுத்தும்.*

*6-320*

---

# நானாவித அறிவித்தல்கள்

### பண்டாரவளை மாநகர சபை

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை சட்ட விதிகள்) XX ஆம் பிரிவு - விற்பனை நிலையங்கள், லாயம், கரத்தை தரிப்பிடம், தொழுவங்கள் ஆகியவை வைத்துக்கொள்வதற்கான அனுமதிப்பத்திரம் இல. 09 ஆம் துணை சட்ட விதிக்கோவையை திருத்தம் செய்தல்*

*1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (அங்கீகரிக்கப்பட்ட துணை சட்ட விதிகள்) 2 ஆவது பிரிவின்கீழ் உள்ளூராட்சி அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட மேற்படி 2 ஆம் பிரிவின் (3) ஆவது உப பிரிவின் ஒழுங்குவிதிகளின் கீழ் பண்டாரவளை மாநகர சபையினால் அங்கீகரிக்கப்பட்ட துணைசட்ட விதிக்கோவையின் XX ஆம் பிரிவு - விற்பனை நிலையங்கள், லாயம், கைவண்டிகள் தரிப்பிடம், மாட்டுத் தொழுவங்கள் ஆகியவை வைத்துக்கொள்வதற்கான அனுமதிப்பத்திரம் இல. 09 ஆம் துணை சட்ட விதிக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளவேண்டிய இறைச்சி, மீன் வகைகள் தவிர, இம் மாநகர சபையினால் வழங்கப்பட்டுள்ள பொது விற்பனை நிலையங்கள் தவிர்ந்த மாநகர சபை எல்லைக்குள் எந்தவொரு இடத்திலும் அல்லது வீதியிலும் சபையின் விசேட அனுமதிப்பத்திரம் இன்றி, 'தொகையாகவோ, சில்லறையாகவோ மரக்கறி விற்கவோ, அல்லது விற்பனைக்காக காட்சிப்படுத்தவோ, அல்லது அங்குமிங்கும் எடுத்துச் செல்லவோ' கூடாதென 252 அதிகாரமான மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் இல. 267 (1) உப பிரிவிற்கு அமைய திருத்தம் செய்து தெரிவிப்பது உகந்ததென 2012.09.26 ஆந் திகதி இம் மாநகரசபையில் நடைபெற்ற விசேட சபைக் கூட்டத்தின் இல. 05 (iii) ஆம் சபை தீர்மானத்தின் படி தீர்மானிக்கப்பட்டது என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*எச். எம். ஜே. ஹேரத்,*
*மாநகர ஆணையாளர் (பதில்),*
*பண்டாரவளை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பண்டாரவளை,*
*2012.10.11.*

*6-327/1*

**பண்டாரவளை மாநகர சபை**

*நிறுவனங்கள் மற்றும் தொழில் சம்பந்தமான வரி அறவிடுதல் - 2013*

*மேற்காணும் தலையங்கத்துடன் என்னால் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இல. 1789 - 2012, திசெம்பர் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை, IV (ஆ) இன் கீழ் உள்ளூராட்சி பகுதியில் வெளியிடப்பட்ட பண்டாரவளை மாநகர சபையின் நிறுவனங்கள் மற்றும் தொழில் சம்பந்தமான உப அலகின் அறிவித்தல் இல. 01 பகுதிக்கு மேலதிகமாக கீழ்க்காணும் உப அறிவித்தலின் பகுதி 2013, வருடத்திற்காக நிறுவனங்கள் மற்றும் தொழில்களுக்கான வரிகள் அறவிடுவதற்கு 2012.11.20 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்துவதற்கு பண்டாரவளை மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் தெரிவிக்கின்றேன்.*

*எச். எம். ஜே. ஹேரத்,*
*மாநகர ஆணையாளர் (பதில்),*
*பண்டாரவளை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பண்டாரவளை,*
*20.11.2012.*

***அட்டவணை***

***01 பகுதி***

**தொழில்கள் மற்றும் வியாபாரங்கள்**

*01. சுற்றுலா சம்பந்தமான நிறுவனத்தை நடாத்திச்செல்லல்.*

*6-327/2*

---

**பண்டாரவளை மாநகர சபை**

*அபிவிருத்தி செய்யப்படாத காணிகளுக்கு வரி அறவிடுதல்*

*252 ஆவது அதிகாரத்தின்படி மாநகர சபைகளுக்கான கூட்டத்தின் 247 ஆ (1) உப சரத்திற்கமைய மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்ட அதிகாரங்களுக்கமைய பண்டாரவளை மாநகர வரம்பிற்கு உட்பட்ட பிரதேசங்களில் அபிவிருத்தி செய்யப்படாத காணிகளின் மதிப்பிடப்பட்ட மதிப்பின் 2% வீதத்தினை வருடாந்த வரியாக சபையினால் ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் அறவிடுவது உசிதம் என பண்டாரவளை மாநகர சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*மேலும் இவ்வரி 2013 ஆம் வருடத்தில் இருந்து ஒவ்வொரு வருடமும் திசெம்பர் 31 ஆந் திகதிக்கு முன்னதாக குறித்த காணி சொந்தக்காரர்களால் பண்டாரவளை மாநகர சபைக்கு செலுத்த வேண்டும் என இத்தால் அறியத்தரப்படுகின்றது.*

*எச். எம். ஜே. ஹேரத்,*
*மாநகர ஆணையாளர் (பதில்),*
*பண்டாரவளை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பண்டாரவளை,*
*2013, ஏப்பிறல் 01.*

*6-327/3*

---

**பண்டாரவளை மாநகர சபை**

*நீர் விநியோகம் சம்பந்தமான உபவிதிகளின் கீழ் விதிக்கப்படும் அறிவித்தல்*

*1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி சபைகளின் அங்கீகரிக்கப்பட்ட உபவிதிகள் சட்டத்தின் 2 ஆம் பந்தியின் கீழ் உள்ளூராட்சி அமைச்சரினால் தயாரிக்கப்பட்ட 1989.1.20 ஆந் திகதிய 541/17 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியின் IV*

(ஆ) பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள பொது விதிகளை பண்டாரவளை மாநகர சபை ஏற்றுக்கொண்டு, அந்த உபவிதிகளின் IX 32 ஆம் பந்தியின்படி உபவிதிகளில் கூறப்பட்டுள்ள கட்டண அறவீடு சம்பந்தமாக கீழ் காட்டப்பட்டுள்ள அட்டவணையின் படி பண்டாரவளை மாநகர சபையினால் மீளாய்வு செய்யப்பட்டு 01.05.2013 ஆந் திகதி முதல் அறவிடப்படும் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

எச். எம். ஜே. ஹேரத்,
நகர ஆணையாளர் (பதில்),
மாநகர சபை பண்டாரவளை.

மாநகர சபை அலுவலகம்,
பண்டாரவளை,
2013, ஏப்பிறல் 30.

**அட்டவணை**

1. மாநகர சபை எல்லைக்குள் நீர்மானியின் மூலம் வீட்டுத்தேவைக்காக பாவிக்கப்படும் நீருக்காக, வீட்டு உரிமையாளர்கள் அல்லது அவ்வீட்டில் வாடகைக்கு இருப்பவர்களினால் செலுத்த வேண்டிய கட்டணம் பின்வருமாறு அமையும்.

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-05 | 16 0 |
| 06-10 | 25 0 |
| 11-15 | 30 0 |
| 16-20 | 40 0 |
| 21-25 | 58 0 |
| 26-30 | 70 0 |
| 31-40 | 80 0 |
| 41-50 | 100 0 |
| 51 மேல் | 125 0 |

மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 200 0 அறவிடப்படும்.

2. மாநகர சபை எல்லைக்குட்படாத வீட்டுத்தேவைக்காக பாவிக்கப்படும் நீருக்கான கட்டணம்.

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-05 | 20 0 |
| 06-10 | 30 0 |
| 11-15 | 40 0 |
| 16-20 | 50 0 |
| 21-25 | 58 0 |
| 26-30 | 70 0 |
| 31-40 | 80 0 |
| 41-50 | 100 0 |
| 51 மேல் | 125 0 |

இது தவிர மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 400 0 அறவிடப்படும்.

3. மாநகர சபை எல்லைக்கு அப்பால் (வீட்டுப்பாவனை தவிர்ந்த) அனைத்து பாவனையாளர்களிடமிருந்தும் அறவிடப்படும் கட்டணம்.

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-25 | 75 0 |
| 26-50 | 100 0 |
| 51-75 | 125 0 |
| 76 மேல் | 140 0 |

இது தவிர மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 500 0 அறவிடப்படும்.

4. மீளாய்வு செய்யப்பட்ட கட்டணம் - அரசாங்க பாடசாலைகள்

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-30 | 20 0 |
| 31 மேல் | 25 0 |

மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 200.00 அறவிடப்படும்.

5. மீளாய்வு செய்யப்பட்ட கட்டணம் - மத நிறுவனங்கள்

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-30 | 15 0 |
| 31 மேல் | 25 0 |

மத நிறுவனங்களில் மொத்த கட்டணத்திலிருந்து 10% கட்டணம் மாத்திரமே அறவிடப்படும். இது தவிர மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 200.00 அறவிடப்படும்.

6. மீளாய்வு செய்யப்பட்ட கட்டணம் - அரசாங்க பாடசாலைகளில் நிர்வகிக்கப்படும் தங்கும் விடுதிகள்

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | 60 0 |
| 11-20 | 70 0 |
| 21-30 | 80 0 |
| 31-40 | 100 0 |
| 41 மேல் | 125 0 |

இது தவிர மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 400.00 அறவிடப்படும்.

7. மீளாய்வு செய்யப்பட்ட கட்டணம் - மத சார்பற்ற கட்டணம் அறவிடப்படும் நிறுவனங்கள்

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | 60 0 |
| 11-20 | 70 0 |
| 21-30 | 80 0 |
| 31-40 | 100 0 |
| 41 மேல் | 125 0 |

இது தவிர மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 200.00 அறவிடப்படும்.

8. மீளாய்வு செய்யப்பட்ட கட்டணம் - அரசாங்க பாடசாலைகள் தவிர்ந்த கட்டணம் அறவிடப்படும் பாடசாலைகள் மற்றும் பாலர் பாடசாலைகள்

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 | ரூபா 60 0 |
| 11-20 | ரூபா 70 0 |
| 21-30 | ரூபா 80 0 |
| 31-40 | ரூபா 100 0 |
| 41 மேல் | ரூபா 125 0 |

இது தவிர மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 350.00 அறவிடப்படும்.

*9. மீளாய்வு செய்யப்பட்ட கட்டணம் - சாதாரண ஹோட்டல், வாடி வீடு, தங்கும் விடுதிகள், வியாபார ஸ்தாபனங்கள், பிரத்தியேக வகுப்புகள் நடத்துமிடம், கட்டிட நிர்மாணப் பணிகள் செய்யுமிடம்*

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-10 வரை | 60 0 |
| 11-20 | 70 0 |
| 21-30 | 80 0 |
| 31-40 | 100 0 |
| 41 மேல் | 125 0 |

மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 400.00 அறவிடப்படும்.

*10. மீளாய்வு செய்யப்பட்ட கட்டணம் - சுற்றுலா விடுதிகள், அரசாங்கத்தினால் நிர்வகிக்கப்படும் ஹோட்டல்கள், அரசாங்க நிறுவனங்கள், கட்டிட நிர்மாணப் பணிகள் செய்யுமிடங்கள்*

| அலகு | கட்டணம் ரூபா ச. |
|---|---|
| 01-25 | 75 0 |
| 26-50 | 100 0 |
| 51-75 | 125 0 |
| 76 மேல் | 140 0 |

மேலதிகமாக சேவைக்கட்டணம் ரூபா 1,500.00 அறவிடப்படும்.

டிரக்டர் பவுசர் மூலமாக வழங்கப்படும் நீருக்கான கட்டணம் - ரூபா 1,500.00
டாட்டா பவுசர் மூலமாக வழங்கப்படும் நீருக்கான கட்டணம் - ரூபா 2,500.00

மாநகர சபை எல்லைக்கு அப்பால் டிரக்டர் பவுசர் மூலமாக வழங்கப்படும் நீருக்கான கட்டணத்துடன் 1 கி. மீற்றருக்க ரூபா 100 வீதம் அறவிடப்படும். டாட்டா பவுசர் மூலம் வழங்கப்படும் நீருக்காக முதலாவது கி. மீற்றருக்கு ரூபா 220 வீதமும் மேலதிக கி. மீற்றருக்கு ரூபா 120 உம் அறவிடப்படும்.

நீர்மானி ஒன்று செயலிழக்கும் பட்சத்தில் அந்த நீர்மானியைத் திருத்தும் வரை, பாவனையாளர் முன்னைய ஆறு மாத காலத்திற்கு பாவனை செய்துள்ள அலகுகளைக் கணக்கிற் கொண்டு சராசரி அலகுகளைக் கருத்தில் கொண்டு பட்டியலிடப்படும்.

நானாவித அறவீடுகளும் நிபந்தனைகளும்

- பாவனையாளர்கள் புதிய இணைப்பொன்றைப் பெற்றுக்கொள்ளுமிடத்து, அதற்கான மொத்த கட்டணத்தையும் மாநகர சபைக்கு அவர்களே செலுத்த வேண்டும்.
- நீர் பாவனையாளர்களினால் மீளப்பெற்றுக்கொள்ளக்கூடிய ரூபா 2,000.00 ம் வைப்புப்பணம் மாநகர சபைக்குச் செலுத்தப்படல் வேண்டும்.
- பாவனையாளர் நீர் பட்டியலில் காணப்படும் தொகையினை 3 மாதங்களுக்குள் செலுத்தத் தவறுமிடத்து 10% தண்டப்பணம் அறவிடப்படும்.
- ஏதேனுமொரு காரணத்திற்காக பாவனையாளர்களின் நீர் இணைப்பு துண்டிக்கப்படுமிடத்து மீளிணைப்புக் கட்டணமாக ரூபா 1,000 ம் 12% பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் அறவிடப்படும்.
- அனைத்து கொடுப்பனவுகளுக்கும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட 12% பெறுமதி சேர்க்கப்பட்ட வரியும் அறவிடப்படும்.

6-327/4

**பண்டாரவளை மாநகர சபை**

*வாகனங்களை நிறுத்துவதற்கான கட்டணம் அறவிடல் - 2013*

*பண்டாரவளை மாநகர சபை எல்லையில், பண்டாரவளை ஸ்ரீ புஷ்பாராம விகாரைக்கு முன்னாள் அமைந்துள்ள வாகனத் தரிப்பிடத்தில் வாகனங்களை நிறுத்துவதற்கான* ***துணை சட்ட விதிகளை*** *மீள் திருத்தம் செய்யும் வரை 1952 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களுக்கான துணை சட்ட விதிகளுக்கு அமைய அங்கீகரிக்கப்பட்ட துணை சட்ட விதிக்கோவையின்* XVIII *ஆம் பிரிவின் உப அட்டவணைகளுக்கு 2013.05.01 ஆந் திகதி முதல் நடைமுறையாகும் வண்ணம் அறவிட தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*எச். எம். ஜே. ஹேரத்,*
*மாநகர ஆணையாளர் (பதில்),*
*பண்டாரவளை மாநகர சபை.*

*மாநகர சபை அலுவலகம்,*
*பண்டாரவளை,*
*2013, ஏப்பிறல் 26.*

**அட்டவணை**

*01. வாகனங்களுக்கு மணித்தியாலத்திற்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கான கட்டணம் - ரூபா 50.00*

*6-327/5*